செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்துசாதனம்

சிவமயம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி யாழ்ப்பாணம் தொலைபேசி: 356

பிரதி விலை: சதம் 10.

புத்-அ௦] யாழ்ப்பாணம்:- கீலக ஸு வைகாசி மீ ௧௮ உ வெள்ளிக்கிழமை (31-5-1968) [இல-அ

## 'சாதி சமயம்' பற்றிய சிந்தனை

[ பண்டிதை த. வேதநாயகி ]

"ஆகமங்களுக் கெல்லாந் தலையான காமிகத்துள்ளே விதந்தெடுத் தோதுதலானும்" என்று பிரமாணங் காட்டி வருணமும் ஆச்சிரமும்பற்றி ஆசாரங்களுக்குத் தாரதம்மியம் ஓதப்படுதலைச் சிவஞான பாடியத்திலே சிவஞான முனிவர் தெளிவிக்கின்றார்.

சைவம் சாதிபற்றி ஆதி சைவம், மகாசைவம், அநு சைவம், அவாந்தர சைவம், பிரவர சைவம், அந்திய சைவம் எனப் பகுப்புடையதாகின்றது. மகா சைவர்க்கு விதித்த ஆசாரம் அவாந்தரசைவராற செய்தல் கூடாது.

'இச் சமய முதலிய தீக்கைப்பேறு மறையோர் முதலிய மூன்று வருணத்தார்க்கும் சற்சூத்திரருக்கும் அநுலோமருக்குமேயாமென உணர்க. ஏனையோர் திருநோக்க முதலிய தீக்கைக்கேயன்றி, ஔத்திரி தீக்கைக்கு உரியரல்லர் என்க. திருநோக்க முதலியன சுதந்திர தீக்கையாயும், ஔத்திரிக்கு அங்கமாயும் இரு வகைப்படும்' என்பது பாடியம்.

ஆதிசைவர் கர்ப்பக் கிருகத்திலும், பிராமணர் அர்த்த மண்டபத்திலும், க்ஷத்திரியர் மகா மண்டபத்திலும, வைசியர் இடபத்தின் முன்னும், சூத்திரர் இடபத்தின் பின்னும் புகுந்து வழிபடுதற்குரியரென்று அஞ்சுமான் என்னும் ஆகமம் விதித்தலைக் காண்கிறோம்.

சனன மரணாசௌச முடையவர்கள் ஆலயத்துக்குப் போகலாகாது. ஆசௌசத்தின் காலவெல்லை தீக்கைபற்றியும் சாதிபற்றியும் வேறுபடும். ஔத்திரி தீக்கைக்கு உரியரல்லாத சாதியார்க்கு ஆசௌசமில்லாத காலம் உண்டாவென்பது விசாரித்தற்குரியது

புலையர் புறச்சமயிகள் தூரஸ்திரீகள் முதலாயினோர் திருநந்தன வனத்திற் புகலாகாது என்பது விதி.

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் அநுலோமர் அறுவருமாகிய பத்துச் சாதியாருள், அங்கினரும் மற்றைச் சாதியாரும் தங்கள் தங்கள் அதிகாரத்திற்கேற்ப ஆசாரியர் பண்ணிய தீக்ஷையைப் பெற்றுத் தூலலிங்கமாகிய தூபியையேனும், திருக்கோபுரத்தைத்தானும் பத்திர புஷ்பங்களால அர்ச்சித்துத் தோத்திரஞ் செய்து நமஸ்கரிப்பதே அவர்களுக்குச் சிவபூசை என்பது விதி.

ஊரினெல்லை ஆறும் ஆவரணமென்று கூறப்படுகிறது. திருநாளைப்போவார் தில்லை எல்லையை வலங்கொண்டமை அறியப்படுகிறது. முப்போதும் திருமேனி தீண்டுவார் பெரிய புராணத்திலே பேசப்படுகிறார்கள். 'முதற் சைவராம் முனிவர்', 'சிவவேதியர்' என்று அழைக்கப்படுகிறார்கள். 'அப்பெருந்தகையார் குலப்பெருமை யாரே புகழும் பெற்றியதோ' என்கின்றார் சேக்கிழார். வேதியர்கள் குலந்தானுயர்ந்தோரென்பது சம்பந்தர் தேவாரத்திலே காணத்தக்கது.

நமிநந்தியடிகள் நாயனார் சரித்திரத்திலே சாதி பேசப்படுகிறது. 'தேவர் பெருமான்' என்னும திருப்பாட்டிலே எல்லாக் குலத்திலுள்ளோரும் சுவாமியைச் சேவித்துச் செல்லத் தாமும் உடன் சென்றதனாலே தமமை இழிவு தொடக்கினமையை அந்நாயனார் கூறுகின்றார். திருவாரூர்ப் பிறந்து வாழ்வா ரெல்லாரும் மணிகண்டராகிய சுவாமியின் வடிவினராக நாயனார் காணும்படி சுவாமி அருளினமையினாலே இழிவு தொடக்கின்றென்றது பொருந்தாததாயிற்று.

தொடர்ச்சி 2-ம் பக்கம்

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நற்பு வார்நமர் நாவி
னவிற்றினால்
வற்பு நாண்மலர் வார்மது
வொப்பது
செம்பொ னார்தில கம்முல
குக்கெலாம்
நம்ப னாமம் நமச்சி வாயவே

திருச்சிற்றம்பலம்
- திருஞானசம்பந்த சுவாமிகள்

உ
மகாகும்பாபிடேகம்

இலங்கைப் பல்கலைக் கழக
முருகன் கோயில்
மகா கும்பாபிஷேகம்
6-6-68-ல் 10-45 மணிமுதல்
11-20 வரையுள்ள
சுபமுகூர்த்தவேளையில் நிகழும்.

### நாவலர் நல்வாக்கு

பிறர் பொருளானது, உடல் உயிர் இரண்டிற்கும் ஊறு செய்தலால், உடல் ஒன்றிற்கே ஊறு செய்யும் விஷத்திலும் கொடியதாம்.

சைவப் பிரகாச
அச்சியந்திரசாலை
### கௌரவ அதிபர்

1968-ம் ஞு ஜூன் மீ 1-உ தொடக்கம் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையின் கௌரவ அதிபராகக் கடமையாற்றும்படி யாழ். சைவபரிபாலன சபைச் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் நியமிக்கப் பெற்றுள்ளனர்.

## சமாச்சாரம்

மகோற்சவம்

சித்தங்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவிலில் இன்று (31-5-68) கொடியேற்றுவிழாவுடன் மகோற்சவம் ஆரம்பமாகும். 9-6-68 ல் ஆரோகற்சவம் நடைபெற்று 10-6-68 ல் தீர்த்தோற்சவமும் 11-6-68 இரவு வைரவர் மடையும் நடைபெறும் இன்றிரவு 8 மணிக்கு மெய்

## சேக்கிழார் பெருவிழா

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தினரால் ஷெவிழா 1, 2-6-68 திகதிகளில் சேக்கிழார் குருபூசையுடன் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

1-6-68 காலை கல்லூரிப்பிரார்த்தனை மண்டபத்தில் சேக்கிழார் குருபூசையும் தொடர்ந்து திருமுறையோதல் திருநாவுக்கரசு நாயனார் புராணபடனம் மாகேசுர பூசை என்பனவும் இடம் பெறும்.

பிற்பகல் 5 மணிக்கு வண்ணை சிவன் கோவிலிலிருந்து, ஊர்வலம் ஆரம்பமாகிக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் விழா ஆரம்பமாகும்.

'திருக்கோயில்' இதழாசிரியர் சித்தாந்தப் புலவர்மணி புலவர் ந. ரா முருகவேள் M.A; M.O.L. அவர்கள் இருநாட்களிலும் சிறப்புச் சொற்பொழிவாளராய்க் கலந்து கொள்வர். அறிஞர் பலரின் ஆய்வுரைகளும் கருத்தரங்கு இசையரங்கு என்பனவும் இடம்பெறும்.

பெரியபுராண பரிசுப் போட்டியில் சித்தி யெய்தியோர்க்கு தங்கப் பதக்கங்களும் பிறவும் பரிசிலாய் வழங்கப்பெறும்.

## ஈழத்துச்சிதம்பரம்
### புனருத்தாரண
### அத்திவாரக்கல் நாட்டுவிழா

— "காரை நாடன்" —

திருமூலநாயனாரால் "சிவபூமி" என்று விதந்து கூறப்படுவதும் ஸ்ரீ தக்ஷிண கைலாச மென்றும் சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய பட்டினப் பாலையில் "ஈழம்" எனப் புகழப்பெறுவதுமாகிய நம் இலங்காபுரியின் வடபால் இலங்கை என்னும் எழில் மிகு நங்கையின் சிரசாய் அமைந்துள்ளதும் பண்டை நாளிற் தமிழர்களின இராசதானியாய விளங்கியதும பின்பு செயதுங்கவரராசசிங்கன் என்னும் அரசனிடம் இந்தியாவினின்றும வந்து கவி பாடிய கவிவீரராகவன் என்னும் அந்தகனுக்குப் பரிசிலாய் வழங்கப் பெற்றதுமாய யாழ்ப்பாணநகரிலிருந்து ஏறக்குறையப் பதினொரு கல் தொலைவில் குடதிசையில் உள்ளது காரைதீவு எனப் பண்டு வழங்கப்பட்டு வந்த காரைநகராகும்.

இக்காரைநகரானது இற்றைக்கு ஏறக் குறைய 2355 வருடங்கட்கு முற்பட்ட சரித்திரப் பிரசித்திவாய்ந்தது. "வடிவேல் எறிந்த வான்பகை பொறாது" கடலானது ஒளிநாடு, பெருவளநாடு, எனபவற்றையும குமரிநாட்டின் அனேக பகுதிகளையும அழித்த காலை எஞ்சி நின்ற பகுதியே காரைநகர் எனவும் கூறுவர். "மணிமேகலையில்" குறிப்பிடப்படும "மணிபல்லவம்" என்பதும் இக்காரை நகரே யாகும்.

இங்கு "அகத்தியர்" "தூர்வாசர்" முதலிய தவ சிரேஸ்டர்களும் அமர்ந்து தவஞ் செய்தனர் இத் தூர்வாகிரி (தூபிலு)க்கு அண்மையில் ஆதியில் ஆண்டி என்பவரால் ஓர் ஐயனார் ஆலயம் புதுப்பிக்கப்பட்டது. அதனருகேயன்றி னுற்போல் நாளடைவில் "அம்பலவி முருகர்" என்பவரால் ஓர் சிவாலயம் புதுப்பிக்கப்பட்டது. அச் சிவாலயத்தில் பிரதிஸ்டை செய்வதற்குச் சிவலிங்கத்தைப்

தொடர்ச்சி 2-ம் பக்கம்

கண்டாரதீன வித்துவான் திரு P. A. S ராசசேகரன் அவர்களின் தேவார இன்னிசைக் கச்சேரியும் "நால்வர் பணி" என்னும் விடயம் பற்றிய கதாகாலட்சேபமும் நடைபெறும்.

x x x

### பொன் விழா

காரைநகர் சைவ மகாசபையின் பொன்விழா எதிர் வரும் 3, 4-6-68 திகதிகளில் மாலை 5 மணி முதல் ஷெ சபை மண்டபத்தில் நடைபெறும். முதல்நாள் விழாவிற்கு யாழ் பரமேஸ்வரா கல்லூரி அதிபர் திரு. மு ஞானப்பிரகாசம் B. A; B. Sc. அவர்களும் இரண்டாவதுநாள் விழாவிற்கு காரை. இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ தியாகராசா M. A; M. Litt. அவர்களும் தலைமை வகிப்பார்கள் சென்னை "திருக்கோயில்" ஆசிரியர் N. R முருகவேள் M. A; M. O. L அவர்கள் இருநாட்களிலும் சிறப்புச் சொற்பொழிவாளராய்க் கலந்து கொள்வர். மேலும் பல அறிஞர்களின் ஆய்வுரையும் இடம்பெறும்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

THE HINDU ORGAN

# இந்துசாதனம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

கிலகஞ்ஸ் வைகாசி மீ கஅ-உ வெள்ளிக்கிழமை [1968]

## தணுவான புராண நூல்

—————0—————

அநபாய சோழ மகாராசன் தமது முதல் மந்திரி யாராகிய அருண்மொழித் தேவரை நோக்கிச் சுந்தர மூர்த்திநாயனர் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை யென்னும் தேவாரப் பதிகத்திலுள்ள அறு பத்து மூன்று தனியடியார்களதும் ஒன்பது தொகை யடியார்களதும் வரலாற்றினை விரித்து ஒரு காவிய மியற்றும்படி கேட்க அன்னவரும் தாம் சிதம்பர தலத்தில் வதிந்து கொண்டு அந் நூலை ஆக்குவதாக வாக்குப் பண்ணி அத் தலத்தையடைந்தனர் சிதம் பரத்தின் எல்லையைச் சேர்ந்து மகிழ்ச்சி யடைந்து தரையில் விழுந்து பணிந்து சிவகங்கையில் ஸ்நானஞ் செய்து சிவ வேடங்களைப் பூண்டு அம்பலவாணரு டைய பாதங்களை இருகரங்களையும் உச்சிமேல் வைத்து வணங்கிச் சிவானந்தப் பேரொளியில் மூழ்கினர் சேக்கிழார் நாயனர் ஆக்குகின்ற காவியத்துக்கு திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனர் முதலிய மூவரும் ஓதி யருளிய தேவாரத் திருமுறைகளே யாதாரமாகையினல் அவர்களையும் வணங்கிக் கொண்டு ஆயிரக்கால் மண் டபத்தை யடைந்து சிவபெருமானுடைய திருவருளை நினைந்து அவர் 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுத்த அசரீரி வாககைத் தொடக்கமாகக்கொண்டு செவ்விய தமிழ் விருத்தப் பாக்களினல் சேக்கிழார் நாயனர் தமது தாணுவான புராண நூலைப் பாடத் தொடங்கினர்.

வந்துசூழ நிரைத்தவையிரு நூறுகான்மணி மண்டபத்
தேக்கையார்திரு வருளையுன்னி யிருந்து சேவையர் காவலர்
செந்தமிழ்த் தோடையால் விளங்கிய திருவிருத்த நிருத்தனர்
தந்தசோன்முத லாவேடுத்தனர் தாணுவான புராண நூல்.

தாணுவான புராணநூல் என்ற திருநாமத்தினல் உமாபதிசிவாசாரியார் திருத்தொண்டர் புராணத்தை வழைக்கும் சிறப்பு சிந்திககததககது தாணு வென்ற பதம் பல பொருட்களைக் குறிகரும் ஒரு சிறந்த சொல். சிவலிங்கம், சிவம். நிலைபேறு, புகலிடம் என்ற மங்கலமான பொருட்களையும் அப்பதம குறிக்கிறது. திருத்தொண்டர் புராணம ஓதுபவர்களுடைய உள்ளத் திலுள்ள அஞ்ஞான இருளைப் போககி மெய்ஞ்ஞான வொளியைத்தரவல்லது. ஆகவே அந்நூலுக்கு உமாபதி சிவாசாரியார் இட்ட தாணுவான புராணநூல என்னும நாமம்எத்துணைப்பொருததமுடையதென்பதுவிளங்கும்.

சிவனடியார் பொருமையைக் கூறும் பொழுது சிவபெருமானுடைய பெருமையே வரலாறுகளிலபிரதிப லிக்கும். திருததொண்டர் புராணம என்றும நிலை பேறுனது. திருத்தொண்டர் புராணம் ஓதுகின்றவர்க ளுடைய மனத் துன்பத்தை நீககவலலது. அல்லல்படு கிற மக்களுககுப் புகலிடமாகவுளளது

சேக்கிழார் நாயனர் அரசனுடைய அரண்மனை யிலிருந்து தமது திருததொண்டர்புராணத்தை இயறற விரும்பவில்லை. உலகப் பற்றுக்களைக் களைந்து சிவபெருமானுடைய திருவடிகளை இடையருது சிந்தனை புரிநதுகொண்டு தமது நூலைப் பாடினல அந் நூல் இறைவன் வாககாக அமையுமென்று உணர்ந்தார். தாம சிவமாந் தனமையையடைநது அந் நூலை இயற்றவேண்டுமென்பது அவருடைய திருவுள்ளம். அங்ஙனம் நூலைப் பாடிமுடிததனர்,

எருலகெலா முணர்ந் தோதற் கரியவன் னென்
றிறைவன் முத லடி யெடுத்துக் கோடுத்தருளக் கோண்டு
பாருலகி னுமகனின் றெடேதுக் கைநீட்டப்
பாடிமுடித் தனர் தோண்டர் சீர்பரவ வல்லார்

சிவ பெருமான் முதலடி யெடுத்துக் கொடுத்தருள அதை முதலாகக் கொண்டு இவ்வுலகில் நாமகள சொற்களை எடுத்துக் கொடுக்க தொண்டர் சீர்பரவ வல்லவராகிய சேக்கிழார் நாயனர் அந்நூலைப் பாடி முடித்தனர் இக்கருத்துக்களெல்லாவற்றையும் சீர்தூக்கி நோககும்பொழுது அந் நூலுக்கு உமாபதி சிவாச்சாரியார் இட்ட "தணுவான புராணநூல்" என்ற திரு நாமத்தின் பெருமை உள்ளுபவர்களுடைய உளளத்தில் திருவருளைத் ததும்பச் செய்யும்,

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## 'சாதி சமயம்' பற்றிய சிந்தனை

விதிப்படி. நியமம் என்ற சொற்கள் வழிபடும் முறை யைச் சொல்லு மிடமெங்குங் கேட்கப்படும்.

சாதியும் தீட்சையும்பற்றி மந்திரோச்சாரணம் வேறு படும். வைதிகக் கிரியையும் ஆகமக் கிரியையும் வேறு படும்.

வேதம், ஆகமம் தேவார திருவாசகம், சித்தாந்த சாத் திரம், திருக்குறள் இவையெல்லாம் சாதி பேசுகின்றன. இவற்றிலுள்ள கருத்துக்கள் செந்தமிழ்த் தொகை நூல் களிலே பிரகாசிக்கின்றன.

சாதியினுஞ் சமயம் அதிகமென்பது சைவநீதியே ஞானகாண்டம் வருணத்தினும் அதிகமாகின்றது. புறச் சமயம் தாழ்ந்த சாதியினும் தாழ்ந்தது. தேவார திருவா சகத் தமிழ் தேவபாஷையினுஞ் சிறந்தது பிராமணர்கள் கண்ணப்பரை வணங்கும்படி சிவபத்தி சாதியினும் மேற் படுகின்றது ஞானிகளுக்கு 'விரதமொடாச்சிரமச் செயல் கள்' நீங்குதல குறறமாகாது!!

கிரியை சரீர சுத்தியை வேண்டுகின்றது. ஞானம் ஆன்மசுத்தியை வேண்டுகின்றது. கிரியையாகிய தவம் ஞானத்தைப் பயக்கும். சரீரசுத்தி சாதிபற்றியது.

திருவிழா முடிவிலே பிராயச்சித்தஞ் செய்யப்படும். வழிபடும் ஆசையினுலே உரிமரல்லாதவர் திருவிழாக் காலத் திலே உட்புகுத லுண்டாகலின் பிராயச்சித்தத்துக்கு அதுவு மொரு காரணம் என்பர்.

பாரதத்திலே ஆகமமும் சான்றோர் செல்லும் நெறி யும் ஒழுக்கத்துக்குப் பிரமாணமாதல் அறியப்படுகின்றது வழிவழியாக வருகின்ற ஆசாரங்களை மெல்ல மெல்லக் கைவிட்டு வந்தோம். இப்பொழுது முழுதையும் அழிக்க முயல்கின்றோம். வடமொழியைத் தளளினமையினுலே உண்மையை ஆராய முடியவில்லை. 'உலகாயதமெனும் ஒண்டிறற்பாம்பு' சீறுகின்றது. திசையெல்லாம் மாயா வாதப் பேய்கள் சஞ்சரிக்கின்றன.

பல பிறப்புக்களிலே ஈட்டிய சிவ புண்ணியத்தினுலே மெய்யுணர்வு வாய்க்கின்றது. அதனுலே மெய்ப்பத்தி விளை கின்றது. பத்தியிலே திருவருள்விளக்கம் மேலிடுகின்றது; 'அன்பே சிவம்'. எவரிடத்திலே திருவருள் விளங்குமோ அவர் வணங்கற்பாலர். காளத்தியிலே கண்ணப்பரைக் கண்டதும் சம்பந்தர் வீழ்ந்தார். 'கும்பிட்டபயன் காண் பார்போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்' என்பது சேக்கிழார் வாக்கு. அப்பூதியடிகள் திருநாவுக் கரசரை வணங்கினர். பெரும்பாணர் மகா பரிசுத்தமான நித்தியாக்கினி வேதிகைக்குப் பக்கத்திலே நித்திரை செய் யும்படி அன்பு செய்தவர் திருநீலநக்கர். இவ்வாறு பிரா மணர்கள் சாதியினும சமயம் அதிகம் என்பதற்கு எடுத் துக் காட்டாக விளங்குகின்ருர்கள். சமயம் என்பது தவம் மெய்யுணர்வு அன்பு திருவருள்விளக்கம் என்றிவ்வாறு விளையும் நிலை.

பிறப் பொழுக்க மில்லையாயின் சாதியில்லை. எந்தச் சாதியாருக்கும் சிவபூசை உண்டு. சுவ சூரியனை வழிபடும் பூசை யார்க்கு முண்டு. 'எங்கேனும் யாதாகிப் பிறந்திடி னும்' அடியார்க்கு அருளுண்டு.

சாதியினும் சமயமே அதிகம் என்பதற்கு மேற்பிறந் தார் கீழ்ப்பிறந்தும் அருள் பெற்ருரை வணங்குதலே பொருள். சாதியாலும் சமயத்தாலும் உயர்ந்தவர்களைச் சாதியாற் ருழந்தவர்கள் சமயத்தா லுயர்ந்தாராயினும் வணங்கற்பாலார். சாதியாலும் சமயத்தாலும் இழிந்தவர் கள் அவ்விரண்டினும் உயர்ந்தவர்களோடு தம்மைத் தாமே ஒப்ப மதித்தலும் உயர்ந்தவர்களினும் தாம் உயர்ந்தவ ரென் றெண்ணுதலும் அறிவுக்கு விரோதமேயன்ருே. பிறப் பொழுக்கததிற் சிறந்தவர்களாகிய உயர்ந்த சாதி யார் பிறப் பொழுக்கங் குன்றினவர்களை, 'ஜாதிப் பிரஷ் டம்' செய்யும நீதி குன்றினமை வருந்தத்தக்கது. குறறஞ் செய்தவன் பிராயச்சித்தஞ் செய்து கொள்வதும தண்ட னைக் குட்படுவதும் நீதி. அந்த நீதி இக்காலத்தில் எதிர்க் கப்படுகிறது. குற்றம் மலிய மலியக் குற்றமே குண மென்ற நிலை — 'அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின் மிகப்பட்டுச்செம்மாககும்' நிலை — வந்துவிட்டது. 'சுதந்திரம்' என்னுஞ் சொல் 'குற்ற மிகுதி' என்னும் பொருளைத் தருமபோலும்.

சைவசமயம் என்னும் மகாவிருட்சம் எல்லாருக்கும், யானைக்கும, சிலந்திக்கும் நிழலளிக்கும். குலமிலராகினுங் குலத்துக் கேற்பதோர் நலமிகக் கொடுக்கும். மீனபடுத்துக் கொண்டு நின்ற அதிபத்தரிடத்திலே, ஆடை யொலித் துக்கொண்டு நின்ற திருக்குறிப்புத் தொண்டரிடத்திலே, பசு மேய்த்துக்கொண்டு நின்ற ஆனயரிடத்திலே, சமையல் செய்து கொண்டிருந்த புனிதவதியாரிடத்திலே சிவபெரு மானுடைய திருவருள் வெளிப்பட்டது!

'உள்ளம் பெருங்கோயில்' 'ஊனுடம் பாலயம்'

'தேடித் தேடொணுத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகோண்டேன்'

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### யாழ் இந்துக் கல்லூரியில் சாரணர் விழா

———

நிகழும் 4-6-68. அன்று யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரியில் அதன் சாரணர் குழுவின் ஆண்டு விழா நடைபெறும். இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும் கல்லூரிப் பழைய சாரணருமாகிய கலாநிதி சி நகுலேஸ்வரன் Ph. D. இதற்கு பிரதம விருந்தினராக இருப்பார் மாவட்ட சாரணுளர் திரு J. G. அரசரெத்தினம் பரிசில்களை வழங்குவார்
பாசறைத் தீ கதம்ப நிகழ்ச்சிகள் சாரணர் விளையாட்டுக்கள் முத லியன நடைபெறும்.

### ஈழத்துச் சிதம்பரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற விருப்பி அவர் இந்தியா செல்ல விழைந்த காலை ஆண்டவன் அவர்கனவிற்ருேன்றிச் சிதம்பரத்தில் உள்ள ஓர் ஆசாரியரிடம் பதினறு லிங்கங்கள் உண்டென்றும் அவற்றில் தாம் அடையாளம் காண்பிப்பதையே வாங்கி வந்து பிரதிஸ்டை செய்யும் படியும் திருவருள் கூர்ந்தனர்.

அவர் இந்தியா சென்று அத்திருவருட் பிரகாரம் சிதம்பரத்தில் குறிப்பிட்ட ஆசாரியரையடைந்து அங்குள்ள பதினறு லிங்கங்களைப் பார்வையிடுகையில் ஓர் லிங்கத்தினிருந்து காற்றெழக் கண்டு திருவருளை உணர்ந்த அவ் விலிங்கத்தையும் பிறபரிவார மூர்த்திகளையும் வாங்கி வந்துபிரதிஸ்டை செய்து கும்பாபிஷேகம் செய்துவைத்தனர்.

பெருமானின் பெயர்: —
சுந்தரேஸ்வரர்
அம்பிகையின் பெயர்: —
சௌந்தராம்பிகை.

இங்குள்ள ஆலயத்திலுள்ள நடராச மூர்த்தியின் திருவாசியில் ஐம்பது சுடர்கள் மிளிர்கின்றன. இவை இறைவன் ஒருவனே ஓரெழுத்தாய் (பிரணவம்) மூன்றெழுத்தாய் ஐந்தெழுத்தாய் (ஸ்ரீ பஞ்சாட்சரம) எட்டெழுத்தாய் ஐம்பதெழுத்தாய் இருக்கு மியல்பை நமக்குக் காட்டி அவையே வேதம் ஆகமங்கள், மந்திரங்கள் என நமக் குணர்த்துகின்றது

"ஐம்ப தேழுத்தே
அனைத்தும்வே தங்களும்
ஐம்ப தேழுத்தே
அனைத்தாக மங்களும்
ஐம்ப தேழுத்தேயு மாவ
தறிந்தபின்
ஐம்ப தேழுத்தும் போய்ஐஞ்
சேழுத்தாமே".

"இணையார் திருவடி எட்டெழுத்
தாகும்
இணையார் கழலிணை ஈரைஞ்ச
தாகும்
இணையார் கழலிணை ஐமபத்
தோன்ருகும்
இணையார்கழலிணைஏழாயிரமே"
என்பன திருமந்திரம்.

இத்துணைச் சிறப்புடைய இவ்வாலயத்தைப் புனருத்தாரணம்செய்யுமுகமாக சென்ற 10-5-68 ல் பாலஸ்தாபன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது எதிர்வரும் வைகாசி மீ 24 உ (6-6-68) வியாழக்கிழமை பகல் 11 மணி தொடக்கம் 12 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில் டிை ஆலயத்தில் கருங்கற் றிருப்பணி வேலைகட்காய அத்திவாரக் கல் நாட்டுவிழா சிறப்புற நடைபெறும்.

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 24 மாசம் 36 மாசம் என்னும் காலங்களை வரையறுக்க ஏற்படும்வட்டியும் முறையே 7 விகிதமும் 8 விகிதமும் 9 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை

எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 — மனேஜர்.


# அன்னை அபிராமியின் அருள்பெருகு திருவளம்

[ ஆசிரியர் பிரம்மஸ்ரீ க. வை. ஆத்மநாதசர்மா ]

( முன் வளர்ச்சி — 6 )

### 29. உள்ளே புரக்கும் புரத்தை

அணுவாதல் முதலிய எட்டுவகைச் சித்திகளை வேதாந்த ஞானிகள் பெறுவர். அவற்றை அவர்களுக்கு அருளுபவர் பராசக்தியாவர். அப்பராசக்தியே ஏனைய சக்திகளாகக் கிளைத்தற்கு ஏதுவாயிருப்பவர் பரமசிவம். அப்பரமசிவத்தை நோக்கிச் சரியை கிரியை யோகம் ஞானம என்னும் நால்வகை நெறிப்பட்டுத் தவமுயன்று செய்பவர் சைவசித்தாந்த ஞானிகள். அவர்களடையும் பரமுத்தியாக இருப்பவரும், அப்பரமுத்தி விளைவதற்கு வித்தாகி மூளைத்தெழுந்த சிவஞானமாயிருப்பவரும், ஆன்ம போதத்தினுள்ளே பறைந்து நின்று நம்மை பெதத் முத்தியாகிய பதமுத்தி பரமுத்தி என்னும் இரண்டிலும் பாதுகாப்பவரும திருபுரசுந்தரியாகிய அபிராமிதேவியேயாவர்.

### 30. கரையேற்றுகை நின்திருவுளமே

ஏகரூபியாக உள்ளவரே! வெகுரூபியாக உள்ளவரே! நிஷ்களையாய் அரூபியாக உள்ளவரே! ஏழையாகிய தமியேனுக்குக் குலதெய்வமாகிச் சகளையாகிய அபிராமிதேவியே! தமியேனது சொப்பனவத்தையில் அன்றொருநாள் வந்து தோன்றித் தமியேனை யாது தவம்பற்றியோதடுத்து ஆட்கொண்டருளினீர். அவ்வாறு ஆட்கொண்டருளியதை அல்லவென்று மறுத்தல் சிவகாருண்ணிய முடைய தேவரீருக்கு முறையாகுமா? ஆகாதன்றோ! ஆதலால், தேவரீருக்கு அடிமையாகிய தமியேன் இனி என்ன குற்றங்களைச் செய்தாலும், சமுத்திரமத்தியிலே சென்று வீழ்ந்தாலும கருணைக்கையால் எடுத்து முத்திக்கரையிற் சேர்ப்பித்தல பெருமாட்டியாகிய தேவரீரது திருவுளப்பாங்கேயாகும்.

### 31. ஈன்றெடுப்பான் ஒரு தாயுமில்லை

அபிராமி தேவியும அவரைப் பாங்கிற் கொண்டவராகிய சிவபிரானும் ஒரே வடிவராகி அர்த்த நாரீசுரத் திருக்கோலங்கொண்டு தமியேனது சொப்பனவத்தையின் கண் எழுந்தருளிவந்து திருவடி தீட்சை செய்து ஒன்றுக்கும் பற்றாத புழுத்த நாயினுங்கடையேனைத் தமக்கு மெய்யன்பு செய்யும்படி பக்திநிலையில் வைத்தருளினர். அதனால், இனி ஆராய்ச்சி செய்து கொள்வதற்கு வேறு மெய்ச்சமயங்களுமில்லை. என்னைப் பெற்றெடுப்பதற்கோ ஒருதாயுமில்லை; எனவே, பசிய மூங்கில்போல் தோள்களையுடைய பெண்களின் மீது வைத்த சிற்றின்ப ஆசையும் இனி எமக்குப் போதுமானதேயாம்.

(வளரும்)

( 2-ம் பக்கத் தொடர்ச்சி )

### சாதி சமயம் பற்றிய சிந்தனை

'வைத்த பொருள் நமக்காமென்று
சித்த மொருக்கிச் சிவாய நம' வென்ற இருப்பவர்க்கன்றி
அத்தன் அருள் பெறலாமோ.

இக்காலத்திலே மேலோர் வழிபடுதற்கும் ஆலயம் இல்லை; கீழோர் வழிபடுதற்கும் ஆலயம் இல்லை ஸ்நானம் உபவாசம் முதலிய விதிகளுக்கமையுஞ் சரீராரோக்கியம் இல்லை. ஐம்புலனடக்கும் ஆற்றலில்லை. இரங்குதற்குரியாரிடம் இரக்கம் இல்லை. பணிவுக்குரியாரிடம் பணிவு இல்லை. எங்கும் ஆசையும் செருக்குமே மலிந்திருக்கின்றன. ஆசாரமும் உச்சரிக்கும் ஆற்றலும் அன்பும் இல்லையானால் மந்திரமில்லை. மந்திரமில்லையானால் மூர்த்தி இல்லை. மூர்த்தி இல்லையானால் கோயில இல்லை.

வேரூன்றி வருகின்ற சைவமென்னும் மகா விருட்சத்தின் அடியிலே நெருப்பு வைக்கலாகாது. குடிக்கு விளக்காகிய புதல்வன் நோயுற்றிருக்கும் பொழுது மரணகாலஞ் சமீபித்துவிட்டதென்றுணர்ந்தால் நஞ்சூட்டிக் கொல்வதில்லை.

'தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள் அறிவார் இல்லை
சேயினும் நல்லவன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லவன் தாழ்சடை யோனே'.

# கோயில் உறுதியாக இருந்தால் வழிபாடும் உறுதியாகும்

"கற்றளியாக அமைத்து இறைவனை வழிபடுவதுசாலச் சிறந்த பெருஞ் செயலாகும். இறைவன் திருக்கோயில் உறுதியாக இருந்தால் நம் வழிபாடும உறுதியாகும்; அதனால் வரும்பயனும் உறுதியாகும்" ஈழத்துச் சிதம்பரமாகிய காரைநகர்ச் சிவாலயத்தில் சுவாமி சந்நிதியையும அம்பாள் சந்நிதியையும் கருங்கல்லால் அமைப்பதற்கான அத்திவாரக்கல நாட்டுவிழா சம்பந்தமாக அனுப்பிய செய்தியில், 'கலைமகள்' ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

யூன் மாதம் ஆறுந் தேதி நிகழவிருக்கும இந்தவிழாவில் ஸ்ரீமத் தத்புருஷ தேசிகர், புலவர் ரா. முருகவேள் முதலான இந்தியப் பெரியார்கள், ஈழத்தின் பல பாகத்திலுமுள்ள சைவ ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், கல்லூரி அதிபர்கள், அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள்.

இரண்டு ஆலயங்களையும் கட்டி முடிப்பதற்கு இரண்டு இலட்ச ரூபாவும, இதனைத் தொடர்ந்து கட்டவிருக்கும் இராஜ கோபுரத்துக்கு ஒன்றரை இலட்ச ரூபாவும செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த சிற்ப சாஸ்திர நிபுணரான திரு எஸ் செல்லக்கண்ணு ஸ்தபதியின் ஆலோசனைப்படி, சிற்ப வல்லுநர் திரு. கே நாகமுத்து ஆசாரியரின் மேற்பார்வையில் தினந்தோறும இருபதுக்கு மேற்பட்ட சிற்பக் கலைஞர்கள் சென்ற மூன்று ஆண்டுகளாகக் கருங்கல வேலை செய்து வருகிறார்கள். சுவாமியினதும் அம்பாளினதும் பரிவார மூர்த்திகளினதும் பாலாலய ஸ்தாபனம அண்மையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இப்போது பழைய கோவில்களை இடித்துத் துப்பரவுசெய்யும் வேலை மிகத் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உள்ளூரையும் வெளியூர்களையுஞ் சேர்ந்த தொண்டர்கள் பலர் இவ் வேலை சம்பந்தமாகச் சிரமதானத்திலும் ஈடுபட்டுள்ளனர். ——

### கதா கால க்ஷேபம்

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் 25-5-68 ல ஆரம்பமான அலங்கார உற்சவ 6 ம் நாள் விழாவை முன்னிட்டு இரவு தருமை ஞானசம்பந்தர் ஆதீன ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் அவர்களால் "குமர குருபரர்" என்னும் பொருள் பற்றி கதா கால க்ஷேபம் நிகழ்த்தப்பெறும்.

x x x

### வில்லுப் பாட்டு

ஷை ஆலய ஒன்பதாம் திருவிழாவன்று ஈழநாட்டுச் எஸ். கணேசசுந்தரன் கோஷ்டியினரால் "பட்டினத் தடிகள்" சரிதம வில்லுப்பாட்டு நிகழ்த்தப்பெறும்.


### கோட்டு விற்பனவு விளம்பரம்

நெடுந்தீவு நடுக்குறிச்சி 1. க. சதாசிவமும் பெண் தங்கம்மாவும் (அருணாசலம் மகள்) வழக்காளிகள்

வழக்கு இல. M. B. 8070 எதிராக

நெடுந்தீவு கிழக்கு 1. நாகப்பர் அம்பலவாணியும் பெண் 2. கண்மணியும்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8070-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை 1968-ம் ஆண்டு ஆனி மீ 22 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபாய் 1075-00 ம் 21-3 66 தொடக்கம் 25-1-67 வரைக்கும் ரூபாய் 600-00 க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 268-65 சகமும.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப் பகுதி நெடுந்தீவு கோயிற்பற்று நெடுந்தீவு கிழக்கு ஆறை "கடடைசமுலைவு" ப. நில. இல 20-ம் செய்பயிர், வானபயிர்களும், வீடும், கிணறும். இதற்கு எல்லை கிழக்கு இராம நாதன் கைம்பெண் நாகமுத்துவுக்கும், பங்காளருக்கும் இரண்டாம் எதிரிக்கும் உரிய ஆதனம வடக்கு இரண்டாம் எதிரிக்கும், பங்காளருக்கும், கந்தையா பெண் தெய்வானைக்கும் உரிய ஆதனம். மேற்கு கந்தையா பெண் தெய்வானைக்கும பங்காளருக்கும் உரிய ஆதனம. தெற்கு ரோட்டு. இதில் வடக்குப்பக்கமாயிருக்கும் வீடும் செய்பயிர்களும் பிற நீங்கலாக. இதனுடன் மிகுதி செய்பயிர்கள் சொந்தமாக. இதன் மிகுதி சொரியலாய் அரைவாசிப் பங்கு.

(2) ஷை இறை "பிடரி முனை" ப நில இல 40-ம் செய்பயிர்களும எல்லை கிழக்கு வாய்க்காலும், கடற்கரையும் வடக்கு கடற்கரை. மேற்கு சரவணமுத்து சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம தெற்கு சுவாம்பிள்ளை சவிரிமுத்துக்கும பங்காளருக்கும் உரிய ஆதனம் இத்துடன் வடமேற்குப் பக்கமாக இருக்கும் வானபயிர்கள் முழு சொந்தமாக, அத்துடன் தெனமேற்குப் பக்கமாக இருக்கும் வானபயிர் பிற நீங்கலாக இதில் சொரியலாய் 1/3 பங்கு.

(3) ஷை இறை "பயிரவ கோவிலவளவு" அல்லது "பிடாரி முனை" ப நில இல 60-ம் பனைமரங்களும வடலிகளும், வேப்பமரங்களும், செய்பயிர்களும் கிணறும. எல்லை கிழக்கு வாய்க்கால். வடக்கு கடற்கரை. மேற்கு அம்பலவாணர் பெண் கண்மணிக்கும், சரவணமுத்து சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு சவிரி முத்து சின்னப்பு நாயகத்துக்கும் பங்காளர்க்கு முரிய ஆதனம் இத்துடன செய்பயிர். கிணறு, வீடு முழு சொந்தமாக மிகுதியில் சொரியலாய் அரைவாசி.

16. A அப்மன் ரோட் அ ஜெகநாதன்
கந்தர்மடம், யாழ்ப்பாணம் கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
M. 65, 24—5— )

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 7405

(1) தம்பிப்பிள்ளை இரத்தின அடிவேலுவும்

(2) மனைவி மங்கையர்க்கரசி

சுளிபுரம் வழக்காளி

எதிராக

சுளிபுரம் கந்தர் நாகமணி எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7405 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளையின்படி பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டு காணி 1968-ம் ஆண்டு ஆனி மீ 29-ம் உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 1638 - 00 ம் 12-5-65 தொடக்கம் 29 4-66 வரைக்கும் ரூபாய் 1000/- க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 265 - 47

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற் பற்று சுளிபுரம் இறை "குளத் தோட்டம்" என்னும் காணி நி. ப. 3-ம் 2 குழியும் வீடு கிணறு செய்பயிர் வானபயிரும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தர் சின்னத்தம்பியும் மனைவி காமட்சியின் ஆதனம் வடக்கு கந்தர் கதிரமலையும் முருகேசு கைம் பெண் வியாளர் மேற்கு பெரண்ணர் பாரிமுத்தனும் சுப்பர் கைம் பெண் மாணிக்கம் தெற்கு சுப்பையா கைம்பெண் நாகமுத்து பிற நீக்கலாக கிணற்றுப் பங்கும் வழி வாய்க்காலும் வடக்கு எல்லையால் மேற்கு எல்லை காணிக்கு. பதிவு இலக்கம் E 303/67

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நம் 352 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
எம். 56 31-5

## Commission Sale
## கோட்டு விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டில் வழக்கு இலக்கம்: 9532.

1. கணபதிப்பிள்ளை காசமுத்து தரைச்சமி புலோலி கிழக்கு
2. அவர் மனைவி கதிர்தா புலோலி கிழக்கு —வழக்காளிகள்.

எதிராக

1. கந்தவனம் குட்டித்தம்பி கல்லுவம் உடுப்பிட்டி
2. அவர் மனைவி வள்ளிப்பிள்ளை கல்லுவம் உடுப்பிட்டி —எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப் படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1968 ஆ ஜூலாய் மாசம் 15 ந் உ திங்கட்கிழமை (15-7-68) முற்பகல் 9-30 மணி அளவில் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டி குறிச்சிபிறை தோராணி தோட்டம் கீ ப 7½ எல்லைகிழக்கு வேலுப்பிள்ளை இளையதம்பிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், வடக்கு சோமர் முதலுவக்குப் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு வேலுப்பிள்ளை வசுவலிங்கத்திற்கும் மறுபேருக்குமுடையவாதனம், தெற்கு வேலுப்பிள்ளை இளையதம்பிக்கும் மறுபேருக்குமுடைய வாதன இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள் கிணறு அடங்கலிற் சொரிபலாய் ஐந்தில் இரண்டு பங்கும்

| | |
|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா 1532-00 |
| வட்டி ரூபா 1000-க்கு 10 வீதப்படி 13-3-67 தொடக்கம் 24-7-67 வரை | ரூபா 37-33 |
| வட்டி ரூபா 1569-க்கு 5 வீதப்படி 24-7-67 தொடக்கம் 15-4-68 வரை | ரூபா 65-30 |
| செலவுத் தொகை | ரூபா 236-24 |
| மொத்த ரூபா | 1870-87 |

"சிவலிங்கநிலையம்
வி. எம். ரோட்
பருத்தித்துறை,
26-5-68.

க. நல்லலிங்கம்
ஏலவிற்பனை ஆணையாளர் & விலைமதிப்பாளர்
Commissioner of Saler, Auctioneer & Valuer
எம், 57 31—5-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

(1) விசுவநாதர் மைலுவும்
(2) பெண் மீனாட்சிப்பிள்ளையும் அரியாலை யாழ்ப்பாணம் —வழக்காளிகள்

வழ. இல M B 8689 எதிராக

1. யோசேப்பு மரியா பிள்ளையும்
2. பெண் எலிசபேத்தும் 3ம் குறுக்குத்தெரு பட்டினம் யாழ்ப்பாணம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB. 8689-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணை 1968-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மீ 6 உ சனிக்கிழமை (6-7-68) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 5651-45 சதமும் 20-12-1966 தொடக்கம் 11-7-67 வரைக்கும் ரூபா 5000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய்

ஆதன விபரம்

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு ஆறை 'ஒலி சுட்டான்' வரகுச்செய்கைகிலப்பரப்பு 262 (Lms, V C.) 7½ குளி (K L S) வீடும் கிணறும் தென்னை மரங்களும், மறுசெய்பயிர்களும், எல்லை கிழக்கு சதாசிவம் இரத்தினசிங்கத்தின் காணி வடக்கு புதுரோட்டு மேற்கு சதாசிவம் இரத்தினசிங்கத்தின் காணி தெற்கு கடற்கரை இது முழுவதும்.

173, குருசோ வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
5—5—68

க. சரவணமுத்து
கொம்மிஷனர் & விலை மதிப்பாளர்
எம். 58 31—5—

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில்
கைதடி நாவற்குழி முருகன் ஆறுமுகம் —வழக்காளி
வழ. இல: 3321 எதிராக
கைதடி கோவிலாக்கண்டி குமரையா சிவசுப்பிரமணியம் — எதிராளி

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டில் 3321-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப் பிரகாரம் கீழ்க் காணுமாதன விடாப்பில் விபரிக்கப்படுமாதனம் 1968-ம் ஆடி மீ 20-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 2900/- 8-12-66 தொடக்கம் 8-6-67 வரைக்கும் ரூபா 2000 நக்கு 10 வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் செலவு ரூபா 332-91 சதமும். இதில் 7-6-67 ல் செலவுக்காகக் கொடுத்த ரூபா 75 கழித்து மிகுதி.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குழிக் கோவிற்பற்று கோவிலாக்கண்டியிறை காளியப்பிட்டி வயல் நீ பர 2 குளி 2 காளியப்பிட்டி வயல் நீ பர 2 இப்போ ஓராதனம் நீ பர 4 குளி 2 எல்லை கிழக்கு செல்லையா பெண் இராசம்மாவுக்குரிய வாதனம், வடக்கு சின்னப்பா சிவசுப்பிரமணியத்துக்குரிய வாதனம், மேற்கு சின்னப்பொடி கதிரவேலு பெண் பகவதிக்குரியவாதனம், தெற்கு ரோட்டு இதடங்கலும். யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோர் பதிவு F 257/8, F 343/55 F 346/79.

நுணுவில் மேற்கு,
சாவகச்சேரி, 8-5-1968,

செல்லையா குமாரசிவம்,
கொம்மிஷனர்.

ஏம். 59, 31-5-68

## கொக்குவில் கிராமச் சபை
## கேள்வி விளம்பரம்

1. 1968ம் ஆண்டு ஆனி மாதம் 14-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிவரை கொக்குவில் கிராமசபைத் தலைவரால் கீழ்ச்காட்டிய வேலைகளுக்குச் "சீல்" வைத்த கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(அ) சீ. எம். எஸ். இயன வெளி, கேணயடி ஒழுங்கை கொக்குவில் மேற்கு.

(ஆ) நந்தாவில் ஒழுங்கையும் நந்தாவில் சோவில் ஒழுங்கையும். கொக்குவில் கிழக்கு.

(இ) உடையார் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு.

(ஈ) கேணடாவில் மடத்தடிக் கிணறு.

2. கேள்விகள் கிராமச் சபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும், அல்லது பதிவுத் தபாலில் கிராமச் சபைத் தலைவருக்கு அனுப்பப்பட வேண்டும், அல்லது 14-6-68 ஆம் திகதி மாலை 3-00 நடை பெறவிருக்கும் கிராமசபைக் கூட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும் கேள்வியைக் கொண்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மேற்படி குறிப்பிடப்பட்ட பிரகார வேலைக்கான கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்வியின் நகல் பிரதியொன்று காகித உறையின் இடது பக்க மேல்மூலையில் மேற்படி குறிப்பிட்ட பிரகாரம் வேலைக்கான கேள்வி நகல் என்று எழுதப் பட்டு யாழ்ப்பாணப் பகுதி உள்ளூராட்சி உதவி அதிபருக்கு த. பெ. 19. செயலகம் என விலாசமிட்டு பதிவுத் தபாலில் அதே நேரத்தில் கிடைக்க அனுப்பப்படுதல் வேண்டும்.

4. ரூபா 25/- கட்டுக்காசுகட்டிய தன் பேரில் கி. ச. தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரருக்கு மட்டும் கிராமச்சபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல் வேண்டும் கட்டுக்காசு கட்டியதற்கான பற்றுச்சீட்டு கேள்வியுடன் இணைக்கப்படுதல் வேண்டும் பத்திரங்கள் 12-6-1968 மாலை 2 மணிவரை வழங்கப்படும்.

5, கேள்விகளில்உள்ள மாற்றங்கள்,அழித்தல்கள் யவும் கேள்விகாரரின் கை யொப்பமிட்டு உறுதிப் படுத்தல் வேண்டும்.

6. அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப் பட்டமை அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுப் பணமான ரூபா 25/- திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

7. மேலதிகமான விபரங்கள் எதுவும் கிராமச் சபைத் தலைவரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

8. கேள்விப் பத்திரங்கள் 12 6 68-ம் தேதிக்குப் பின் கொடுக்கப்படமாட்டா.

சி. இரத்தினசிங்கம் ஜே. பி.
தலைவர்
கொக்குவில் கிராமச் சபை.
கொக்குவில் கிராமச் சபை அலுவலகம்,
கொக்குவில் 29-5-1968
மா ம
எம். 62, 31-5


## இந்துசாதனம்
திருத்திய வருடசந்தாவிகிதம்

| | |
|---|---|
| உள்நாடு | |
| ஆங்கிலம் | 9-00 |
| தமிழ் | 9-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 12-00 |
| வெளிநாடு | |
| ஆங்கிலம் | 10-50 |
| தமிழ் | 10-50 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-50 |


## கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல 8377
பருத்தித்துறை குமாரசுவாமி நாகலிங்கம் வழக்காளி
எதிராக
பருத்தித்துறை கணபதிப்பிள்ளை தங்கவடிவேலு எதிரி

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப் படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1968-ம் ஆ ஆனி மீ 23 ந உ ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறையிறை நடுவில்லடி நி பர 2½ வீடு தோட்டம் ¾ இதில் ஆட்சிப்படி நி பர 1 குளி 10 3/4 இதற்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் — 20718 —ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்டதும் கலாநிதி மேஸ்தர் க. வேலுமுருகவால் 785—ம் இலக்கத்தில் விஸ்தாரிக்கப்பட்டதுமான படத்தின் படி நி பர 2. இதில்

1. குறித்த படத்தில் 1-ம் நம்பர் துண்டுக்குக் குளி 11, 3/4 -ம் A D E F, L என அடையாளமிடப்பட்ட அறை ஒரு I என அடையாள மிடப்பட்ட கிணற்றையின் பாகமும் எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2-ம் 6-ம் 7-ம் துண்டுகள் வடக்கு குறித்த படத்தில் 2-ம் துண்டும் ஒழுங்கையும் மேற்குந் தெற்கும் பண்டாரம் முருகுப்பிள்ளை கைம்பெண் இராசம்மாவிற்கும் மறுபேருக்கும் முடைய வாதனம், இவ் வெல்லைக்குட்பட்டவைகள் அடங்கலிற் சொரியலாய் நாலில் மூன்று பங்கும்.

2. குறித்த படத்தில் 7—ம் நம்பர்த் துண்டுக்குக் குளி 9, 9/16 எல்லை கிழக்கு தணிகாசலம் பெண் விசாலாட்சிப் பிள்ளையின் உரிமைக் காரருக்குடைய வாதனமும் குறித்த படத்தில் 9—ம் நம்பர் துண்டும். வடக்கு குறித்த படத்தில் 6—ம் 8—ம் 9—ம் துண்டுகள். மேற்கு மேற்சொல்லிய 1—ம் காணியும் பின் சொல்லப்படும் 4—ம் காணியும் தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைக் குட்பட்டவைகள் அடங்கலில் செரியலாய் ¾ பங்கும்.

3. குறித்த படத்தில் 5—ம் நம்பர் துண்டுக்குக் குளி 2¾ கிணறும் எல்லை கிழக்கு தணிகாசலம் பெண் விசாலாட்சிப்பிள்ளையின் உரிமைக் காரருக்குடைய வாதனம் வடக்கு குறித்த படத்தில் 4—ம் நம்பர்த்துண்டு மேற்கு குறித்த படத்தில் 2—ம் 3—ம் துண்டுகள் தெற்கு குறித்த படத்தில் 6—ம் 8—ம் 9—ம் துண்டுகள் இவ்வெல்லைக் குட்பட்ட நிலமடங்கலில் செரியலாய் 3/4 பங்கும் கிணற்றில் பங்கும்.

4. பருத்தித்துறை வெள்றி பாகுதேவன் குறிச்சியிறை நறுவிலடி நி பர 2, 3/4 வீடு 1, தோட்டம் 3 4 இவைகளில் ஆட்சிப்படி நி பர 1 குளி 8, 3/4 மூன்று அறைகள் கொண்ட கிட்டங்கியும் கடைக் கட்டிடம் விறுந்தை எல்லைச் சுவர்கள் கிணறும் எல்லை கிழக்கு மேற் சொல்லிய 2—ம் 3—ம் காணிகள் வடக்கு தெரு மேற்கு அம்மையப் பிள்ளை பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் தெற்கு வீரகத்தியார் கணபதிப்பிள்ளையின் உரிமைக்காரருக்குடைய வாதனம் இவ்வெல்லைக் குட்பட்டவாவிலுஞ் செரியலாய் 3/4 பங்கும்

5. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பள்ளிப்பகுதி செம்பியன்பற்றுக் கோவிற்பற்று உடுத்துறையிறை மணக்காடு ஏக்கர் 30 றூட் 3 பேட்சு 21 இதில் தெற்குப் புறமாக கலாநிதி மேஸ்தர் தா. சுப்பிரமணியத்தால் 1395-ம் இலக்கத்தில் விஸ்தாரிக்கப்பட்ட படத்தில் 1-ம் 2-ம் 4-ம் 5—ம் துண்டுகளுக்கு ஏக்கர் 219 றூட் 2 பேட்சு 15 இதில் குறித்த படத்தில் 3—ம் 4—ம் 5—ம் துண்டுகளுக்கு ஏக்கர் 130 பேட்சு 15 பனைகள் வேம்புகளும் எல்லை கிழக்கு புதுரோட்டு வடக்கு முடிக்குரியகாணியும் எதிரிக்கும் மறுபேருக்கு முடைய வாதனமும். மேற்கு கணபதிப் பிள்ளை பெண் நாகரத்தினத்திற்கும் [illegible] பெண்தங்கம்மாவிற்கு முடைய குறித்த படத்தில் 2—ம் நம்பர் துண்டு தெற்கு முடிக்குரிய காணி இவ் வெல்லைக் குட்பட்டவையடங்கலிற் சொரியலாய் ½ பங்கும்

| | |
|---|---|
| திரட்சித் தொகை | ரூபா 10,037-00 |
| ரூபா6500/- க்கு 21-10-63 தொடக்கம் 8-3-65 வரை 8 வீத வட்டி | ரூபா 715-00 |
| ரூபா 10,752/- க்கு 8-3-65 தொடக்கம் 24-3-68 வரை 5 வீத வட்டி | ரூபா 1679-67 |
| | ரூபா 12431-67 |
| செலவு | ரூபா 109-55 |
| மொத்தம் | ரூபா 12541-22 |
| கொடுபட்ட | ரூபா 1[illegible]037-00 |
| வருமதியான மிகுதி | ரூபா 2504-22 |

R. S. Ramanathan
"உமாபதி"
தும்பளை,
பருத்தித்துறை, 28-5-68
கொமிசனரும, விலைமதிப்பாளரும
ஏல விற்பனையாளரும்.
Commissioner of Sales & Valuer
எம். 60, 31—5—)

மலாயனுந் திருமாலுங் காணுமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருகதில்லைக் குடதிசைக கோபுரவாயில்
நிலவிய கற்பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணைபோற்றி

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், பிரம்மஸ்ரீ க. செ. பாலசுப்பிரமணியஐயர் புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம் அவர்களால், 31—5—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.